செ.வெ.எண்:44 நாள்:24.01.2018

திருநெல்வேலி மாவட்டம்

**குடியரசு தின விழா 26.01.2018 அன்று காலை 11.00 மணிக்கு 425 கிராம ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.**

பின்வரும் பொருட்கள் விவாதிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

- அக்டோபர் 2017 முதல் டிசம்பர் 2017 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கையினை கிராம சபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கை குறிப்புகள் கிராமசபை கூட்டத்திற்கு முன் சமர்ப்பித்தல்.
- குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (VPDP) தொடர்பாக கிராம சபையில் தெரிவித்தல்
- அந்தியோதயா இயக்கம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பினையும், ஊராட்சிகள் அடிப்படை வசதிகள் குறித்த கணக்கெடுப்பு கிராம சபை ஒப்புதல் பெறவேண்டும்.
- அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல்.
- திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிப்பது குறித்து விவாதித்தல்
- கிராம ஊராட்சிகளில் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள் பயன்படுத்துவது குறித்து விவாதித்தல்
- திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான தகவல் தெரிவித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2017-18-ம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தினை டிசம்பா 31 வரையிலான முன்னேற்ற அறிக்கையினை ஒப்பிட்டு விவாதித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் சாத்தியமான பணிகள் குறித்து விவாதித்தல்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், 2018-19-ம் ஆண்டுக்கான வேலை வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை (Labour Budjet) விவாதிக்க வேண்டும்.
- முந்தைய வருடத்தில் சமூக தணிக்கை நடைபெற்று இருந்தால் அறிக்கையினை (Observation and Compliant Reports)படிக்க வேண்டும்.
- மின்னணு வருகைப் பதிவேட்டினை (Elactronic Muster Roll) ஊராட்சிகளில் செயல்படுத்தும் முறையை விளக்க வேண்டும்.
- 2018-19-ம் ஆண்டுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்ட பணி விபரங்களை விவாதிக்கப்பட வேண்டும். (65 % விவசாயம் மற்றும் தொடர்புடைய பணிகள் 40% இதர பணிகள்)
- பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II -ன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலினை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறுதல்.

- தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக தகுதிப் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்க விண்ணப்பம் கோருதல்
- 2013-14-ம் முதல் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் வட்டி மான்யத் திட்டத்தில் (Interest Subvention Scheme) மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 3.00 இலட்சம் வரை வங்கிக் கடன் 7% வட்டி கிடைக்கும் வரை மான்யம் தொகை விடுவிக்க தகவல் தெரிவித்தல்
- தனிநபர் இல்லக் கழிப்பறை திட்டம் குறித்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவரது வீட்டிலும் கழிப்பறை கட்ட ஏற்பாடு செய்தல்
- பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டிலும், நியாய விலைக் கடை செயல்பாட்டிலும் வெளிப்படையான முறையில் கொண்டுவரும் வகையில் நியாய விலைக்கடைகள் பதிவேட்டினை ஆண்டிற்கு இரண்டு முறை சமூக தணிக்கை உட்படுத்தவும் (ஜனவரி 26-ஆகஸ்ட் 15) இத்திட்டம் சிறப்பாக செயல்பட சமூகத் தணிக்கை செய்யப்பட வேண்டும்.
- வெளிநாட்டிற்கு வேலை செல்லும் வெளிநாடு வாழ் தமிழர் நலம் குறித்து வெளிநாட்டில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டும்.
- ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்.
- மகளிர் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள்.
- கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு குறித்து விவாதித்தல்.
- ஊராட்சி மன்றத் தனி அலுவலரால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

எனவே பொது மக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.